# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.187/2019 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 01 (PW– 01 ) |
| **பெயர்** | :– | முரளிதரண் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | பொன்னையன் |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

01, 03, 04, 07, 08 – ஆம் எதிரிகள் தோன்றினார்கள். 05–ஆம் எதிரி காணொலி மூலம் நேர்நிறுத்தப்பட்டார். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், தேங்கல்வாரை ஊரில் வசிக்கிறேன். ஓட்டுநராக தொழில் செய்கிறேன். நான் மேட்டூர் RS புரம் பகுதியில் உள்ள வைத்தீஸ்வரா மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு வரை படித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் என்னுடைய கைரேகை உள்ளது. கையில் அடிப்பட்டு இருந்ததால் கைரேகை வைத்தேன்.

நான் மேட்டூர் காவேரி Cross பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் சாப்பிடுவதற்கு சென்றேன். அந்த உணவகத்தின் பெயர் தெரியவில்லை. பகல் 01.00 மணி இருக்கும். 19.12.2017-ஆம் தேதி என்று நினைக்கிறேன். நான் சாப்பிடுவதற்காக உட்கார்ந்தேன். எனக்கு என்ன உணவு வேண்டும் என்று சொல்லியிருந்தேன். உணவு வருகைக்காக காத்திருந்தபோது சுமார் 04 அல்லது 05 ஆட்கள் முகமூடி அணிந்துகொண்டு பெரிய அரிவாள்களை வைத்துக்கொண்டு என் அருகில் அமர்ந்திருந்தவரை வெட்டினார்கள். நான் எழுந்து ஓட முற்பட்டபோது எனக்கும் வெட்டு விழுந்தது. எனக்கு தலையிலும் வலது கை பெருவிரலும் வெட்டு விழுந்தது. பக்கத்தில் அமர்ந்து இருந்தவர் என்று நான் சொன்ன ஆள் பெயர் அமிர்தராஜ் என்று சொன்னார்கள். அமிர்தராஜ் எனக்கு ஏற்கனவே தெரியாது. எனக்கு வெட்டு விழுந்ததும் நான் அருகில் இருந்த இரும்பு கடைக்குள் ஓடி ஒளிந்துக் -கொண்டேன். அமிர்தராஜின் அருகில் அமர்ந்திருந்தால் என்மீது வெட்டு விழுந்தது. என்னை அவர்கள் குறி வைத்து வெட்டவில்லை. அமிர்தராஜிக்கு என்ன ஆனது என்று எனக்குத் தெரியவில்லை.

சுமார் 15 நிமிடங்கள் கழித்து வெளியில் காவல் துறை அல்லது அவசர ஊர்தி ஒன்றின் சத்தம் கேட்டது. நான் வெளியே வந்தேன். நான் ஒளிந்து

இருந்தபோதே என் நண்பர் சக்திக்கு கைபேசியில் தகவல் சொன்னேன். சக்தியும் அங்கு வந்தார். காவல் துறையினரும் அங்கு வந்தனர். எனக்கு தலையில் அதிக இரத்தம் வெளியேறி இருந்ததால் நான் அரை மயக்க நிலையில் இருந்தேன். சக்தி என்னை அங்கு அருகில் இருந்த SMP என்ற மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். எனக்கு தலையில் தையல் போட்டு முதல் உதவி செய்தார்கள். அங்கியிருந்து என்னை மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து என்னை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொல்லியிருக்கிறார்கள். என்னை கொண்டு செல்ல வாகனத்தில் ஏற்றியபோது சீருடை அணிந்த காவலர் தாள் ஒன்றை காட்டி கையெழுத்து கேட்டார். நான் மயக்க நிலையில் இருந்தேன். கையெழுத்து போடமுடியாததால் கைரேகை வாங்கினார். அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. மறுநாள் அதிகாலையில் -தான் எனக்கு நினைவு திரும்பியது. அதன்பிறகு காவல் துறையின் என்னை விசாரித்தனர். புகாரில் உள்ள சான்றாளரின் கைரேகை **அ.சா.ஆ-01** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரில் மருத்துவர் முன்னிலையில் நான் வாக்குமூலம் அளித்ததாக மருத்துவர் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் மருத்துவர் இருந்தார். அவர் முன்னிலையில் கையொப்பம் வாங்கினார்களா என்று எனக்கு நினைவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

நானும் அமிர்தராஜிம் பள்ளி பருவத்தில் இருந்து நண்பர்கள் என்றால் சரியல்ல. எனக்கும் அமிர்தராஜிக்கும் சதிஸ்குமார் என்பவர் நண்பர் என்றால் இல்லை. சதிஸ்குமார் 01-ஆம் எதிரி ஸ்டாலின் ஜெயக்குமாரிடம் கடன் வாங்கியிருந்தார் என்றும் கடனை திருப்பி கொடுக்காததால் சதீஸ்குமாரை மிரட்டி அவரது வீட்டை கிரையம் வாங்கிக்கொண்டார் என்று சொன்னால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. சதீஸ்குமார் அமிர்தராஜை அணுகி 01-ஆம் எதிரி ஸ்டாலின் ஜெயக்குமாரிடமிருந்து சொத்தை மீட்க உதவி செய்யுமாறு கேட்டார் என்று சொன்னால் அவர்களை எனக்குத் தெரியாது. நானும் அமிர்தராஜிம் சதீஸ்குமாருடன் சென்று 01-ஆம் எதிரியுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம் என்றால் சரியல்ல. 01-ஆம் எதிரி கைபேசி மூலம் அழைத்ததன் பேரில் அமிர்தராஜ் என்னை அழைத்துக் -கொண்டு இந்துஸ்தான் பஞ்சாபி தாபா உணவகத்திற்கு சென்றார் என்றும் அங்கு 01-ஆம் எதிரி ஸ்டாலின் ஜெயக்குமாரும் வந்திருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் மூவரும் குடில் போன்று இருந்த இடத்திற்கு சென்றோம் என்று சொன்னால் இல்லை. நான்தான் என் இருச்சக்கர வாகனத்தில் அமிர்தராஜை அழைத்துக்கொண்டு அந்த இடத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய Pulsor இருச் சக்கர வாகனத்தின் பதிவு எண் TN 02 AA 6134. நாங்கள் அமர்ந்து பேசிக்கொண்டியிருந்தபோது 01-ஆம் எதிரி யாரையோ கைபேசியில் அழைத்ததன்பேரில் 01-ஆம் எதிரியில் மகிழுந்தில் ஐவர் வந்து இறங்கினார்கள் என்றும் அவர்கள்

கையில் வீச்சரிவாள், பட்டாக்கத்தி ஆகியவற்றை வைத்திருந்தார்கள் என்றும் 01-ஆம் எதிரி ஸ்டாலின் ஜெயக்குமார் ஒருவரை பார்த்து பாரதிராஜா இவனை போட்டு தள்ளுங்கடா என்று சொல்லி அமிர்தராஜை காட்டினார் என்றும் சொன்னால் அது போன்று எதுவும் எனக்குத் தெரியாது. 01-ஆம் எதிரி என்னை காட்டி நடராஜா இவனை போட்டு தள்ளுங்கடா என்று சொன்னார் என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. என்னை அவர் வெட்ட முற்பட்டபோது நான் தடுத்ததால் முதலில் தலையிலும் மீண்டும் தடுத்ததால் என் வலது கை கட்டைவிரலிலும் வெட்டுப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் முன்னிலையில்தான் அமிர்தராஜ் ஓடினார் என்றும் அங்கியிருந்த எதிரிகள் அவரை துரத்தி வெட்டினார்கள் என்றும் அமிர்தராஜ் அந்த உணவகத்தின் சமையல் அறைக்கு அருகில் சென்று விழுந்தார் என்றும் சொன்னால் அதுபோன்று எதுவும் எனக்குத் தெரியாது. அதன்பிறகுதான் அங்கு ஓடி ஒளிந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. ஒளிந்துக்கொண்டு அங்கு நடந்ததை நான் பார்த்தேன் என்றும் அமிர்தராஜ் இறந்த பிறகுதான் அங்கு இருந்து எதிரிகள் சென்றார்கள் என்றும் சொன்னால் நான் எதையும் பார்க்கவில்லை. நான் SMP மருத்துவமனையில் இருந்தபோது காவல் துறையினர் அங்கு வந்து என்னை விசாரித்தனர் என்றும் அப்போது அங்கு பணியில் இருந்த மருத்துவர் வீரமணி என்பவரின் முன்னிலையில் நான் வாக்குமூலம் சொன்னேன் என்றும் அவர் முன்னிலையில்தான் நான் கைரேகை வைத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் இதற்குமுன் மேட்டூர் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் சொன்னேன் என்றால் சரிதான். அங்கும்

கைரேகைதான் வைத்தேன் என்றால் சரிதான். நான் நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளித்தபோது ஏற்கனவே எழுதப்பட்ட எதையும் பார்த்து சொல்லவில்லை. ஏற்கனவே என்னிடம் கைரேகை வாங்கிய தாளில் இருந்ததை என்னிடம் கொடுத்து படித்துப் பார்த்து சொல்ல சொன்னார்கள். நீதித்துறை நடுவர்முன் சான்றாளர் சொன்ன வாக்குமூலம் **அ.சா.ஆ-02** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னை சிறைச்சாலைக்கு அடையாளம் காட்ட அழைத்துச் சென்றனர் என்றால் அதற்குமுன் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து நிழற்படத்தை காட்டினார்கள். சிறைச்சாலைக்கு சென்றேன். அங்கு காவல் துறையினர் இருந்தனர். கருப்பு கோட் போட்டு ஒருவர் இருந்தார். அவர் வழக்குரைஞரா நீதிபதியா என்று எனக்குத் தெரியவில்லை. அங்கு 02 பேரை அடையாளம் காட்டினேன். அந்த இருவரின் பெயர் எனக்குத் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளில் யார் என்று கேட்டால் எனக்கு தற்போது நினைவில்லை.

நான் புலனாய்வின்போதும் நீதித்துறை நடுவர் முன்பும் அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தி வாக்குமூலம் அளித்துவிட்டு நானே புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**01–ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னிடம் வெள்ளைத் தாளில் கைரேகை வாங்கினார்கள். நான் முதல் -விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் காவல் துறையினர் விசாரித்த

-போதும் சொன்னேன் என்றால் சரிதான். நான் இரகசிய வாக்குமூலம் சொல்வதற்குமுன் காவல் துறையினர் காவல் நிலையத்திற்கு என்னை அழைத்து சொல்லிக்கொடுத்துதான் நீதித்துறை நடுவர்முன் வாக்குமூலம் சொன்னேன் என்றால் சரிதான். நான் நிழற்படத்தை பார்த்துவிட்டு அடையாளம் காட்டிய நபர்களின் பெயரோ முகவரியோ எனக்குத் தெரியாது.

**03, 04, 05, 07, 08–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

01-ஆம் எதிரி தரப்பின் குறுக்குவிசாரணையை அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.